தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தலையங்கம்: பயிரையே மேயும் வேலி!**

First Published : 04 May 2011 01:20:44 AM IST
Last Updated : 04 May 2011 04:37:11 AM IST

ஸ்டாக்ஹோமில் ஒரு மாநாடு கூடியது. உலகிலுள்ள 173 நாடுகள் அந்த மாநாட்டில் பங்கேற்று, எண்டோசல்பான் போன்ற கொடிய நச்சுத்தன்மை வாய்ந்த பூச்சிக்கொல்லி மருந்துக்கு சர்வதேச அளவிலான தடை பிறப்பிக்க வேண்டுமா வேண்டாமா என்று விவாதித்தன. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட 125 நாடுகள் எண்டோசல்பானுக்குத் தடை விதித்துவிட்டன. மீதமுள்ள 48 நாடுகளில் 47 நாடுகள், மெü்னம் காத்தன. ஒரே ஒரு நாடுதான் எண்டோசல்பான் தடை செய்யப்படக்கூடாது என்று வாதிட்டது. அந்த நாடு, நமது பாரதம் மட்டும்தான்.

ஜெனீவாவில் நடைபெற்ற, நீடித்த அங்கக நச்சு மாசுப் பொருள்கள் ஆய்வுக் கூட்டத்தில், இந்தியா ஆதரவு திரட்டுவதாகச் செய்திகள் வந்தன. தனது கோரிக்கையை வலியுறுத்தும் விதமாக இந்தியா ஒரு வரைவுக் கருத்துரையைத் தனிச்சுற்றுக்காக அனுப்பியுள்ளதாகவும், இந்த வரைவில் ஓராண்டு காலத்துக்கு எண்டோசல்பான் மீதான உலகத் தடையைத் தள்ளிவைக்கலாம் என்று ஆதரவு கோரியதாகவும், இந்த ஜெனீவா கருத்தரங்கில் பார்வையாளர்களாகப் பங்கேற்க கேரளத்தில் இருந்து சென்றிருந்த சி.

ஜெயகுமார், டாக்டர் முகமது அஷீல் ஆகியோர் மின்னஞ்சல் மூலம் அந்த வரைவு நகல்களை அனுப்பியவுடன், கேரளத்தில் எதிர்ப்புகள் வலுத்தன. முழுஅடைப்புப் போராட்டமும் கேரளத்தில் நடைபெற்றது. மாநாட்டின் கடைசி நாளான ஏப்ரல் 29-ம் தேதி, கேரளத்தில் எண்டோசல்பான் தடை செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்து பட்டியலில் சேர்க்கப்பட்டது.

ஒரேயடியாக இந்தப் பூச்சிக்கொல்லி மருந்துக்கு முழுக்குப் போடாமல் இப்படியாகப் படிப்படியாக குறைத்துக் கொள்ளும் முடிவுக்குச் செல்ல இந்தியாவுக்கு வேறுசில காரணங்களும் இருக்கின்றன. இதற்கான முழுமுதற் காரணம், வேறு மாற்று பூச்சிக்கொல்லி மருந்துகளை இந்தியா உருவாக்கவில்லை. இயற்கை வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து, பூச்சிக்கொல்லி மருந்துகளே இல்லாத விவசாயத்துக்குப் புதிய தலைமுறை விவசாயிகளைப் பழக்கவும் இல்லை.

இந்தியாவில் மூன்று நிறுவனங்கள் எண்டோசல்பான் தயாரிப்பில் உள்ளன. இவை ஆண்டுக்கு 9,000 டன் எண்டோசல்பான் மருந்தைத் தயாரிக்கின்றன. இதில் பாதி அளவு இந்திய விவசாயிகளால் பயன்படுத்தப்படுகிறது. மீதி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் மதிப்பு சுமார் ரூ.1,340 கோடி. தற்போது இந்த மருந்தைத் திடீரென்று தடைசெய்து நிறுத்திவிட்டால், இந்தியாவில் இதை நம்பியிருக்கும் 75 விழுக்காடு விவசாயிகளுக்கு மாற்றுப் பூச்சிக்கொல்லி மருந்து கிடைக்காது என்று இந்தியா கருதுகிறது.

2001-ம் ஆண்டிலேயே தொழிற்கூட அபாயங்கள் குறித்த தேசிய நிறுவனம் இந்த பூச்சிக்கொல்லி மருந்து, மனிதர்களுக்குக் கேடு விளைவிக்கிறது என்பதைத் தெரிவித்தது. ஆனால் அதனை அரசு ஏற்கவில்லை. இந்த ஆய்வு மிகத் துல்லியமானதாக இல்லை என்று காரணம் கூறியது.
இந்த மருந்து கேரளத்தில், காசர்கோடு மாவட்டத்தில் உள்ள முந்திரிக்காடுகளில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டதால், அந்த மாவட்டத்தில் பல கிராமங்களில் அங்க ஊனத்துடன் குழந்தைகள் பிறப்பது, புற்றுநோய் அதிகரிப்பு, முடமாகிப்போதல் என பல்வேறு நோய்களுக்கு மக்கள் ஆளானார்கள்.

மேலும் விரிவாக ஆய்வுகள் செய்யப்பட்டபோது, எண்டோசல்பான்தான் இதற்குக் காரணம் என்று தெரியவந்து, போராட்டங்கள் நடத்தப்பட்டன. பாதிக்கப்பட்டோருக்கும், இறந்தவர்களின் குடும்பத்துக்கும் நிவாரணம் வழங்க தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
பஞ்சாப் மாநிலத்தில் பாட்டிண்டா என்கிற பகுதியில் எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்து மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இப்போது அந்த மண்ணே நச்சு மண்ணாகி விட்டிருப்பதுடன், நிலத்தடி நீரும் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பரவலாக பாட்டிண்டா பகுதியில் புற்றுநோய் காணப்படுவதற்கு எண்டோசல்பான் உபயோகப்படுத்துவதுதான் காரணம் என்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

எண்டோசல்பான் மண்ணையும், மனிதரையும் நச்சுப்படுத்தி விடுகிறது என்பது அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ள உண்மை. இது புற்றுநோய்க்குக் காரணம் என்பதில் ஆராய்ச்சியில் கருத்து மாறுபாடு இருந்தாலும், இது ஆண்களின் உடலில் சுரக்கும் ஆண்மைத் தன்மைக்குரிய ஹார்மோனை பாதிக்கச் செய்வதால், பாதிக்கப்பட்ட ஆண்களால் உருவான குழந்தைகள் அங்க ஊனத்துடன், வளர்ச்சியின்றிப் பிறக்கின்றன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
வேறு எந்த நாட்டிலும் நடக்காத, நடக்கவே முடியாத செயல்கள் இந்தியாவில் மட்டும்தான் நடக்கும். மக்களைப் பாதிக்கும் எந்த விஷயமானாலும் வேறு நாடுகளில் அரசால் கட்டுப்படுத்தப்படும். தடை செய்யப்படும். ஆனால் இந்தியாவில் மட்டும்தான் அரசு

எண்டோசல்பான் போன்ற பூச்சிக்கொல்லி மருந்துத் தயாரிப்பாளர்கள் சார்பில், வக்காலத்து வாங்கும் அதிசயம் நடைபெறுகிறது. காசர்கோடிலும், பாட்டிண்டாவிலும் அங்குள்ள மக்களுக்கு எண்டோசல்பானால் ஏற்படும் ஆபத்தை எடுத்துச் சொல்லக்கூட நமது அரசு தயாராக இல்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

மத்திய விவசாயத் துறை அமைச்சர் சரத் பவார் எண்டோசல்பானுக்கு ஆதரவு தெரிவிக்கிறார். பிரதமர் மன்மோகன் சிங்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சர் ஜெய்ராம் ரமேஷும் அவரது கருத்தை ஆமோதிக்கிறார்கள். எண்டோசல்பானை உடனடியாகத் தடை செய்யும் கோரிக்கை தள்ளிப்போடப் பட்டிருக்கிறது. இப்படி இருக்கிறது நிலைமை.

இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா என்றால் அதுதான் இல்லை. இந்தத் தடையைப் படிப்படியாக நீக்குவதற்கு இந்தியா அனுமதியைப் பெற்றுக் கொண்டிருப்பதால், ஏறக்குறைய அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எண்டோசல்பான் இந்தியாவில் ஒரு தொடர்கதையாக நீடிக்கவே செய்யும் என்பதுதான் இதன் பொருள்.

மனித உயிர்களைக் கொல்லும் ஒரு பூச்சிக்கொல்லி மருந்தைக் "கொல்'வதற்குக்கூடப் படாதபாடு பட வேண்டியிருக்கிறது இந்தியாவில்! இந்த லட்சணத்தில் 2020-ல் இந்தியா உலக வல்லரசாக வேண்டும் என்று கனவு வேறு காண்கிறோம்.

**எண்டோசல்பானை தடை செய்யக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

First Published : 04 May 2011 09:01:39 AM IST

செஞ்சி,மே 3: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் எண்டோசல்பான் என்ற பூச்சி மருந்தை தடை செய்ய வலியுறுத்தி செஞ்சி தலைமை தபால் நிலையம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

÷மனித உயிரையும், மண்ணையும் விஷமாக்கும் எண்டோசல்பான் என்ற கொடிய பூச்சி மருந்தை தடை செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

÷ஆர்ப்பாட்டத்துக்கு, தமிழ்நாடு விவசாயிகள் சங்க வட்டத் தலைவர் கே.மாதவன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் என்.சுப்பிரமணியன், நகரச் செயலர் நெடுஞ்சேரலாதன், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செஞ்சி வட்டச் செயலர் சி.கோவிந்தசாமி, மாவட்ட குழு உறுப்பினர் டி.முருகன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். விவசாயிகள் சங்க வட்டாரத் தலைவர்கள் குண்டுரெட்டியார், பாண்டுரங்கன், தனுசு, சுப்பிரமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

÷எண்டோசல்பான் பூச்சி மருந்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து கடந்த பல ஆண்டுகளாக 17 கமிட்டிகள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தும் தடை செய்யவில்லை.

÷மேலும் அமெரிக்கா உள்பட 80-க்கும் மேற்ப்பட்ட நாடுகளில் இந்த பூச்சி மருந்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

÷எண்டோசல்பான் பூச்சி மருந்து, மனித உயிர் மற்றும் கால்நடை, தாவரங்கள் உள்ளிட்ட பல்லுயிர்கள் அழிந்து போவதற்கும், மண் விஷமாக மாறுவதற்கும் காரணமாக உள்ளது என விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

÷எனவே எண்டோசல்பான் பூச்சி மருந்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்பினர்.

**மரபணு மாற்ற கத்தரிக்காயை இந்தியாவில் அனுமதிக்கக் கூடாது**

First Published : 04 May 2011 03:19:23 AM IST

சென்னை, மே 3: மரபணு மாற்றக் கத்தரிக்காயை இந்தியாவில் பயிரிட அனுமதிக்கக் கூடாது என்று இந்திய ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி நிறுவனர் பச்சமுத்து செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை: வேளாண் விளைச்சலை அதிகரிக்கும் நோக்கில், மத்திய அரசின் தடையையும் மீறி, மரபணு மாற்ற தரக் கட்டுப்பாட்டு குழு விஞ்ஞானிகளின் உறுதுணையோடு, இந்தியாவில் மரபணு மாற்ற கத்தரிக்காயை விளைவிக்கவும், விற்பனை செய்யவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இதனை மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய் உடல் நலனுக்கு பெரும் கேடு விளைவிப்பவை. மேலும், விவசாய நிலங்களையும் தரிசாக மாற்றக் கூடியவை.

எனவே, இந்திய விவசாயிகளின் நலன்களுக்கு புறம்பாக, இந்த வகை கத்தரிக்காயை உற்பத்தி செய்யும் சர்வதேச நிறுவனங்களை அனுமதிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும்.

எனவே, இந்த வகை கத்தரிக்காயை மத்திய அரசு அனுமதித்தால், நமது நாட்டின் பாரம்பரிய விவசாயம் முழுவதும், சர்வதேச நிறுவனங்களின் பிடியில் சிக்கும் அபாயம் உள்ளது.

மேலும், இந்த கத்தரிக்காய் மூலம் பல புதிய வைரஸ் நோய்கள் பரவும் அபாயமும் உள்ளது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காயை இந்தியாவுக்குள் அறவே அனுமதிக்கக் கூடாது என்று பச்சமுத்து வலியுறுத்தியுள்ளார்.

**மழையில் நனைந்த நெல் மூட்டைகள்**

First Published : 03 May 2011 10:32:25 AM IST

கோபி, மே 2: கோபி அருகே நெல் கொள்முதல் மையத்தில், மழையில் நனைந்த நெல் மூட்டைகளை அ.கணேசமூர்த்தி எம்.பி. பார்வையிட்டார்.

கோபி அருகேயுள்ள பா.நஞ்சகவுண்டன்பாளையத்தில் அரசு நெல் கொள்முதல் மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் ஏராளமான விவசாயிகள், நெல் மூட்டைகளை வைத்து, விற்பனை செய்து வந்தனர்.

கடந்த பிப்ரவரி மாதம், 20-க்கும் மேற்பட்ட விவசாயிகள் 1,800-க்கும் மேற்பட்ட நெல் முட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

கொள்முதல் மையத்தில் ஏற்கனவே அதிக அளவில் நெல் மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டிருந்ததால், புதிதாகக் கொண்டு வரப்பட்ட நெல் மூட்டைகள், கொள்முதல் நிலையத்தில் திறந்த வெளியில் வைக்கப்பட்டன.

இந்த கொள்முதல் மையம் கடந்த மாதம் 24-ம் தேதி மூடப்பட்டது. திறந்த வெளியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் கொள்முதல் மூட்டைகள் திறந்த வெளியிலேயே இருந்தன.

இந்த நிலையில், கடந்த வாரம் கோபியில் பெய்த பலத்த மழையால், வெளியே அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் நனைந்தது. அவற்றில் நாற்றுகள் முளைக்கத் தொடங்கியன.

**விவசாயிகளுக்கு இலவச மக்காச்சோளம்**

First Published : 03 May 2011 09:34:49 AM IST

கும்மிடிப்பூண்டி,மே 2: கும்மிடிப்பூண்டியை அடுத்த பாதிரிவேட்டில் விவசாயிகளுக்கு கும்மிடிப்பூண்டி வட்டார வேளாண் துறையின் சார்பாக இலவசமாக மக்காச்சோளம் விதைகள் வழங்கப்பட்டது.

÷பாதிரிவேடு தேசிய வேளாண் நிறுவன மையத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு தேசிய வேளாண் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ரகுநாதன் முன்னிலை வகித்தார்.

÷விழாவில் தேசிய வேளாண் நிறுவனத்தின் இணை இயக்குனர் வி.முருகன் கலந்துகொண்டு விவசாயிகளுடன் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், ""ஒரு மூட்டை நெல் ரூ.650 முதல் ரூ.750 வரை மட்டுமே விலை போகும் நிலையில், ஒரு மூட்டை மக்காச்சோளம் ரூ.1300 முதல் ரூ.1500 வரை விலை போகிறது என்பதால் மக்காச்சோளம் லாபகரமான விவசாய பயிர் ஆகும். எனவே விவசாயிகள் இலவசமாக வழங்கப்படும் இந்த விதைகளை பெற்று பயனடைய வேண்டும்" என்றார்.

÷விழாவில் திரளான விவசாயிகள் பங்குபெற்று விதைகளை பெற்றுக் கொண்டதுடன், பயிரிடும் முறை குறித்தும் கேட்டுத் தெரிந்தனர். விழா முடிவில் தேசிய வேளாண் நிறுவனத்தைச் சேர்ந்த கஜேந்திரன் நன்றி கூறினார்.

மழையில் நனைந்த நெல் மூட்டைகளை அரசு கொள்முதல் செய்ய வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தினர்.

இந்த நிலையில், ஈரோடு மக்களவை உறுப்பினர் அ.கணேசமூர்த்தி கொள்முதல் மையத்துக்கு நேரில் வந்து, மழையில் நனைந்த நெல் மூட்டைகளைப் பார்வையிட்டார்.

மழையில் நனைந்த நெல்லைக் காய வைத்துள்ளோம். எனவே, அரசு சார்பில் நெல்லைக் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் அவரிடம் வலியுறுத்தினர்.

விவசாயிகளின் கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக கணேசமூர்த்தி உறுதியளித்தார்.

பின்னர், புதுக்கரைப்புதூரில் உள்ள அரசு நெல் கொள்முதல் மையத்துக்குச் சென்று, அங்கு கொள்முதல் செய்யப்படாமல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த 1,200 நெல் மூட்டைகளைப் பார்வையிட்டார்.

அவருடன், கீழ்பவானி முறைநீர் பாசனக் கூட்டமைப்புத் தலைவர் காசியண்ணன், நிர்வாகி பா.மா.வெங்கடாசலபதி, மதிமுக மாவட்ட துணைச் செயலர் மா.கந்தசாமி உள்ளிட்டோர் சென்றனர்.

**வேளாண், கட்டுமான உபகரணங்கள் வழங்கும் விழா**

First Published : 03 May 2011 01:06:40 PM IST

திருச்சி, மே 2: திருச்சியில் மே தின விழாவையொட்டி, மாநகர, மாவட்ட காங்கிரஸ் விவசாயப் பிரிவு சார்பில் விவசாய, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உபகரணங்களும், ஆட்டோ ஓட்டுநர்களுக்குப் புத்தாடையும் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

மாநகர், மாவட்ட காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு தலைவர் ஜி.கே. முரளிதரன் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் மாநிலப் பொதுக் குழு உறுப்பினரும், தமிழ்நாடு பேருந்து உரிமையாளர்கள் சங்க மாநிலப் பொதுச் செயலருமான தர்மராஜ், மாநகர் மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் எல்.எல். சந்தான கிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வாசன் பாசறை மாவட்டப் பொதுச் செயலர் வெங்கடேசன் வரவேற்றார். உறையூர் கோட்டத் துணைத் தலைவர் முத்துக்குமார் நன்றி கூறினார்.

விவசாயிகளுக்கு சமயத்தில் உதவும் ஆடுதுறை நெல் ரகங்கள்

பதிவு செய்த நாள் : மே 04,2011,00:00 IST




மதுரையில் நெல் சாகுபடி குறிப்பிட்ட பருவத்தில் பெரியார்-வைகை கால்வாய் பாசனத்தில் செய்யப்படுகின்றது. இந்த சாகுபடி மிகப்பெரியதாக இருக்கும். இதில் முதல்போக சாகுபடி, இரண்டாவது போக சாகுபடி உள்ளது. அணைக்கட்டு பாசனத்தைத் தவிர கண்மாய் பாசனமும் உண்டு. சில சூழ் நிலையில் உதாரணமாக கோடை மழை பெய்யும் சூழ்நிலையில் புதிதாக நாற்றுவிட்டு நட்டு ஒரு பயிரை சாகுபடி செய்யும் வாய்ப்பு கிடைக்கும்.

இதை சித்திரை அல்லது வைகாசி அல்லது ஆனி பட்டம் என்று சொல்லலாம். மதுரை விவசாயிகள் தற்போது குறுகிய கால நெல் ரகம் சாகுபடி செய்யலாம். இந்த பட்டத்தில் தமிழ்நாடு பல்கலைக்கழகம் தனது ஆடுதுறை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து ஆடுதுறை 43, ஆடுதுறை 45, ஆடுதுறை 36, ஆடுதுறை 37 போன்ற ரகங்களை விவசாயிகளுக்கு கொடுத்துள்ளது.

கிடைத்த வாய்ப்பினை தவறவிடாமல் கீழ்க்கண்ட ரகங்களை தங்கள் சவுகர்யத்திற்கேற்ப தேர்ந்தெடுத்து சாகுபடி செய்யலாம். இதற்கு முன் ஒரு விஷயத்தை தெரிந்துகொள்ள வேண்டும். தற்போது சாகுபடிக்கு தேர்ந்தெடுக்கும் சூழ்நிலை இப்படி இருக்க வேண்டும். சாகுபடி கிணற்று நீராக இருக்கலாம். சாகுபடி கண்மாயாக இருக்கலாம். சாகுபடி கால்வாய் பாசனமாக இருக்கலாம். மேலும் இந்த மூன்று சூழ்நிலைகளுக்கு கோடை மழை பூமியில் உள்ள ஈரப்பதத்தை கணிசமாக

இருக்க உதவ வேண்டும். இந்த சூழ்நிலையில் குறுகிய கால ரகங்களை சாகுபடி செய்யும்போது நல்லதே ஏற்படும்.

**கல்சர் நெல் ஆடுதுறை 36**: இதை காலத்தை வென்ற ரகம் என்று சொல்வார்கள். இந்த நெல் ரகம் அதிக மகசூலினைக் கொடுப்பதோடு நெல்லுக்கு நல்ல விலையையும் பெற்றுத் தருகின்றது. சாகுபடி சமயம் அதிக வயதினைக் கொண்ட நாற்றினை நட்டாலும் மகசூல் பாதிக்கப்படுவதில்லை.

**ஆடுதுறை 37**: சோதனை சூழ்நிலையில் சாகுபடி செய்தாலும் நல்ல மகசூலினையே தருகின்றது. குண்டு நெல் நல்ல எடையுள்ளது. பழைய சோற்றுக்கு ஏற்றது. இட்லி செய்வதற்கு மிகவும் நல்லது. கடும் பூச்சி, வியாதிகள் பாதிப்பு கிடையாது. கணிசமான வைக்கோல் மகசூல். கதிர்கள் உஷ்ணக் காற்றினால் பாதிப்பு கிடையாது. ஆடுதுறை 37 ரகத்தில் விதைத் தூக்கம் (சீட் டார்மன்சி) உள்ளதால் விவசாயிகள் விதையை சற்று அதிகமாக உபயோகிக்க வேண்டும்.

**ஆடுதுறை 45**: தற்போது விவசாயிகள் இந்த ரகத்தை சாகுபடி செய்யலாம். இந்த ரகத்தின் மதிப்பு நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இந்த ரகம் ஆடுதுறை 43 ரகத்தைவிட கூடுதல் மகசூல் தருகின்றது. தமிழ்நாட்டில் பல இடங்களில் இந்த ரகத்தை தேர்ந்தெடுத்து சாகுபடி செய்கிறார்கள். ஆடுதுறை 45 ரகத்தின் அரிசி பார்ப்பதற்கு நன்றாக உள்ளது. இந்த ரகத்தை வெண்புழுங்கலாக செய்யலாம். இந்த நெல்லின் புழுங்கல் அரிசி மற்ற நெல்லின் புழுங்கல் அரிசி விலையைவிட அதிக விலைக்கு போகின்றது. ஆடுதுறை 45 ரகத்தை விவசாயிகள் நெல்லாக விற்காமல் அரிசியாக விற்கின்றனர். இதனால் லாபம் கூடுதலாக கிடைப்பதாக சொல்கிறார்கள். ஏக்கரில் சுமார் 36 மூடை (மூடை 65 கிலோ) மகசூலாகக் கிடைக்கின்றது.

மதுரை விவசாயிகள் நெல் விவசாயத்தில் நல்ல பேர் பெற்றவர்கள். நிச்சயமாக இவர்கள் தங்கள் முயற்சியில் அமோக மகசூலையும் கணிசமான லாபத்தையும் பெறப்போகின்றார்கள்.**-** எஸ்.எஸ்.நாகராஜன்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : மே 04,2011,00:00 IST

**மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் - உலகளவில் ஒவ்வொரு நாட்டிலும் வணிக ரீதியாக அனுமதிக்கப்பட்ட உயிரியல் தொழில்நுட்பத்தினால் உருவாக்கப்பட்ட பயிர் ரகங்கள்:**

அமெரிக்கா - மக்காச்சோளம், சோயாபீன்ஸ், ஆல்பால்பா, பப்பாளி, பருத்தி, சனோலா, சுகர்பீட், ஸ்குவாஷ்; பிரேசில் - சோயாபீன்ஸ், மக்காச்சோளம், பருத்தி; இந்தியா - பருத்தி; சீனா - பருத்தி, பப்பாளி; பாகிஸ்தான் - பருத்தி; ஆஸ்திரேலியா - பருத்தி, சனோலா; பிலிப்பைன்ஸ் - மக்காச்சோளம்; மியான்மர் - பருத்தி; ஸ்பெயின் - மக்காச்சோளம்; மெக்சிகோ - பருத்தி, சோயாபீன்ஸ்; போலந்து - மக்காச்சோளம்; எகிப்து - மக்காச்சோளம்; சுவீடன் - உருளைக்கிழங்கு;

ஜெர்மன் - உருளைக்கிழங்கு மற்றும் அர்ஜென்டினா, கனடா, பராகுவே, தென் ஆப்பிரிக்கா, உருகுவே, பொலிவியா, கொலம்பியா, சிலி, ஹோண்டுராஸ், போர்ச்சுகல், செக் குடியரசு, ஸ்லோவாகியா, கேஸ்டரிகா ருமேனியா போன்ற நாடுகளில் 1480 லட்சம் எக்டரில் பயிர் செய்யப்படுகிறது.

வளர்ந்துவரும் மக்கள் தொகைப்பெருக்கம், குறைந்து கொண்டுவரும் இயற்கைவளம் மற்றும் விவசாய நிலம்பயன்பாடு இவற்றிற்கு உயிரியல் தொழில்நுட்பமும் ஒரு தீர்வாக அமையும்.

(தகவல்: ஜி.செந்தில்குமார், பிராந்திய மேலாளர், தமிழ்நாடு மஹிகோ மான்சான்டோ பயோடெக் (இந்தியா) லிமிடெட்.

**பண்ணை உபகரணங்கள் வாங்க தொடர்புகொள்ள வேண்டிய முகவரிகள்:** அக்ரி மார்ட் உபகரணங்கள் வாங்க அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்: மதுரை - 98430 53744, புதுச்சேரி - 94434 19522 / 0413-224 3629. சேலம் - 94430 28903 / 0427-227 4242.

பிரீமியர் பவர் எக்விப்மென்ட்ஸ் அண்ட் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 37/1-சி, பல்லடம் ரோடு, பாப்பம்பட்டி, கோயம்புத்தூர்-641 016.

**அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்**: பொது எலக்ட்ரானிக் கம்பெனி, சென்னை. போன்: 044-2225 3533,; கிருஷ்ணா டிராக்டர்ஸ், மதுரை- 92442 13263.

*** விதை முதல் நாற்று விற்பனை வரை நிழல் வலையகங்கள்**: டர்ன் கீ அடிப்படையில் அமைத்து கொடுப்பதற்கு தொடர்பு முகவரி: டோட்டல் அக்ரோ - வெட்கேர், 86, நர்சரி கார்டன், குளூர், கொமராயி வலசு அஞ்சல், மொடக்குறிச்சி, ஈரோடு-638 104. 99945 74445; 94436 83410.

* அக்ரி அண்ட் ஹார்ட்டி டெக் 2011 - சர்வதேச விவசாயம் மற்றும் தோட்டக்கலை கண்காட்சி - 27, 28, 29, 30, மே 2011. விஜயா தொழிற் கண்காட்சி வளாகம், சிங்காநல்லூர், கோயம்புத்தூர்.

**தொடர்பு முகவரி**: டிரேடு இந்தியா எக்சிபிஷன் (பி) லிட், 31, முதல்தளம், 9வது தெரு, டாடாபாத், கோயம்புத்தூர்-641 012.

**போன்**: 0422-655 2288, 0 95004 44491, 0 96002 00400.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

## நெற்பயிரை தாக்கும் இலை சுருட்டுப் புழுக்கள்

பதிவு செய்த நாள் : மே 04,2011,00:00 IST



**தாக்குதல் அறிகுறிகள்**: இலைகள் நீளவாக்கில் சுருட்டப்பட்டு மெல்லிய இழைகளால் பின்னப்பட்டிருக்கும். சுருட்டப்பட்ட இலைகளில் பச்சையம் சுரண்டப்பட்டு வெண்மையாக காணப்படும். இலைகள் காய்ந்த சருகு போல் காணப்படும். பயிர் வளர்ச்சிப் பருவத்தில் தாக்குல் அதிகம் இருக்கும்.

**தாக்குதல் ஏற்படுத்தும் விதம்**: இலை சுருட்டுப்புழுக்கள் இலைகளை நீளவாக்கில் சுருட்டி உள்ளிருக்கும் பச்சையத்தை சுரண்டி சாப்பிடுவதால் இலைகள் வெண்ணிறமாக மாறி பிறகு காய்ந்துவிடும்.

**பூச்சி பற்றிய விபரம்**: தாய் அந்துப்பூச்சி மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் இருக்கும் முன் இறக்கையில் குறுக்காக இரண்டு கோடுகளும் பின் இறக்கையில் ஒரு கோடும் காணப்படும். இறக்கைகளின் ஓரம் கருமை நிறத்தில் பட்டையாக காணப்படும். தாய் அந்துப்பூச்சிகள் சுமார் 300 முட்டைகள் வரை குவியலாக இடும். ஒவ்வொரு குவியலிலும் 10 முதல் 12 முட்டைகள் வரை நீளவாக்கில் இலை நரம்பின் ஓரத்தில் இருக்கும் முட்டைகள் மஞ்சள் கலந்த வெண்மை நிறத்தில் நீள்கோள வடிவத்தில் இருக்கும். 4 முதல் 6 நாட்களில் முட்டைகள் பொரிந்து இளம் புழுக்கள் வெளிவரும். இளம் புழுக்கள் பசுமை கலந்த மஞ்சள் நிறத்திலும், வளர்ந்தபின் பசுமை நிறத்திலும் காணப்படும். புழுப்பருவம் 25 முதல் 30 நாட்கள் வரை இருக்கும். பின் கூட்டுப்புழு பருவத்தை சுருட்டப்பட்ட இலைக்குள்ளேயே கழிக்கும். கூட்டுப்புழு பழுப்பு நிறத்தில் காணப்படும். 4 முதல் 8 நாட்களில் தாய் அந்துப்பூச்சி வெளிவரும்.

**தாக்குதலுக்கான காரணிகள்**: காற்றின் ஈரப்பதம் அதிகளவிலும், வெப்பநிலை குறைந்த அளவிலும் உள்ள காலங்களில் இலை சுருட்டுப் புழுவின் தாக்குதல் அதிகளவில் இருக்கும். அதிகப்படியான தழைச்சத்து இடுதல் மற்றும் நெருக்கமான பயிர் இடைவெளி போன்ற காரணிகளும் இவற்றின் பெருக்கத்திற்கு ஏதுவாகின்றன.

**ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள்:** பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு மேல் தழைச்சத்து உரம் இடுவதை தவிர்க்க வேண்டும்.

* வரப்புகளை செதுக்கி களையில்லாமல் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் இலை சுருட்டுப்புழுவின் மாற்று உறைவிடங்களை அழிக்கலாம். * இரவு நேரங்களில் விளக்குப் பொறிகளை வைத்து தாய் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.* முட்செடிகளின் கிளைகளை பயிரின் மீது படும்படி உராயச் செய்வதன் மூலம் மடங்கியுள்ள இலைகள் கிழிக்கப்பட்டு உள்ளிருக்கும் புழுக்கள் இயற்கை எதிரிகளான கோனியோசஸ் குளவி, ஸ்டைபலினிட் வண்டு மற்றும் சிலந்திகளின் தாக்குதலுக்கு ஏதுவாக இருக்கும். * டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் என்னும் முட்டை ஒட்டுண்ணி அட்டைகளை ஒரு ஏக்கருக்கு 2 மி.லி. என்ற வீதத்தில் நடவு செய்த 25, 40 மற்றும் 55ம் நாளில் ஒட்டுகட்டி வெளியிட வேண்டும். * வளர்ச்சிப் பருவத்தில் பொருளாதார சேதநிலை 10 சதத்தையும், பூக்கும் தருணத்தில் 5 சதத்தையும் தாண்டும்பொழுது வேப்பங் கொட்டைச்சாறு 5 சத கரைசலை தெளிக்க வேண்டும் (5 கிலோ வேப்பம் பருப்பை நன்றாக இடித்து தூளாக்கி ஒரு சாக்கு துணியில் முடிச்சாகக் கட்டி 100 லிட்டர் தண்ணீரில் சுமார் 8 மணி நேரம் வரை வைக்க வேண்டும். பின்னர் சாக்குப்பையினை பிழிந்து வேப்பங் கொட்டைச் சாறுடன் தூளாக்கிய காதி சோப்பு 300 கிராமை கரைத்து தெளிக்க வேண்டும்).

தாக்குதல் தீவிரமடையும் சமயங்களில் பின்வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்தலாம். 1. டைக்குளோர்வாஸ் 100 மி.லி. 2. மோனோகுரோட்டோபாஸ் 400 மிலி. 3. குளோர்பைரிபாஸ் 500 மிலி. 4. புரோபனோபாஸ் 400 மிலி.

சி.விஜயராகவன், ப.துக்கையண்ணன்,வேளாண்மை அறிவியல் நிலையம்,ராமநாதபுரம்-625 503 மற்றும் ஜட்டா கவிதா,
மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி  நிலையம், செட்டிநாடு-630 102.

**நிலக்கடலைக்கு ஜிப்சம் இடுவது அவசியமா?**

பதிவு செய்த நாள் : மே 04,2011,00:00 IST

பொதுவாக நம் தமிழகத்தில் நீர் தேங்காத வடிகால் வசதியுடைய மணல் கலந்த கரிசல் மண் மற்றும் செம்மண் உள்ள பகுதிகளில் நிலக்கடலை சாகுபடி செய்யப் படுகின்றது. பொள்ளாச்சி,

தேனி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், தென்காசி ஆகிய பகுதிகளில் டிஎம்வி-7, ஏஎல்ஆர்-3 ஆகிய ரகங்களை சித்திரைப்பட்டம் (ஏப்ரல்-மே)யில் மானாவாரியாக சாகுபடி செய்கின்றனர். இதுதவிர (ஜூலை -ஆகஸ்ட்) பின் ஆடிப்பட்டத்தில் டிஎம்வி-7, விஆர்ஐ-2, கோ-2 ஆகிய ரகங்களை பயிரிடுகின்றனர்.

மேலும் நீர்ப்பாசன வசதியுடைய பகுதிகளில் கார்த்திகை அல்லது மார்கழிப் பட்டம் (டிசம்பர் - ஜனவரி) , மாசிப்பட்டம் (பிப்ரவரி - மார்ச்) மற்றும் சித்திரைப்பட்டம் (ஏப்ரல்-மே) ஆகிய பருவங்களில் நிலக்கடலை பயிரிடப்படுகின்றது. சாதாரணமாக நிலக்கடலை பயிருக்கு விதைத்த 20வது நாள் மற்றும் 40வது நாள் என 2 முறை களை எடுக்க வேண்டும். 2வது களைக்குப் பின்தான் நிலக்கடலை செடியானது தரையில் வேரூன்றி புதிய பிஞ்சுகளை தரையினுள் இறக்க ஆரம்பிக்கும். அந்த சமயத்தில் தரையானது கடினமாக இல்லாமல் இருந்தால்தான் பிஞ்சுகள் நன்கு வேரூன்றி மண்ணினுள் இறங்கி நல்ல விளைச்சலைப் பெறமுடியும்.

இல்லாவிட்டால் பிஞ்சுகள் சரிவர இறங்க முடியாமல் சிறுத்தோ அல்லது வெளியே தெரிந்து பின் பச்சை நிறமாகவோ மாறிவிடும். இதனைத் தவிர்க்க 2வது களைஎடுத்தபின் அல்லது 45வது நாளில் ஜிப்சம் (கால்சியம் சல்பேட்) 400 கிலோகிராம்/ஹெக்டேர் அல்லது சல்பா 40 கிலோகிராம்/ஹெக்டேர் (சல்பா 10 கிலோகிராம்/ஏக்கர்) என்ற அளவில் நிலத்தில் இட்டு நன்கு மண் அணைக்க வேண்டும். ஜிப்சம் அல்லது சல்பா இடுவதன் மூலம் நன்கு பருத்த, திரட்சியான, சோடைகளற்ற, நல்ல நிறமான நிலக்கடலைகளைப் பெறமுடியும்.

**மேலும் விபரங்களுக்கு:** வேளாண்மை ஆலோசனைக் குழுமம், 172, வணிக வளாகம், பூ மார்க்கெட், மாட்டுத்தாவணி (பேருந்து நிலையம் அருகில்), மதுரை-625 007.போன்: 0452-258 5759.-கே.வடிவேல் குமார், (ஆராய்ச்சியாளர்) 88700 12101.

**மரவள்ளியில் மாவு பூச்சியை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : மே 04,2011,03:09 IST

குறிஞ்சிப்பாடி : குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் மரவள்ளி பயிரில் மாவு பூச்சியை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் வெளியீடு குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் அம்பலவாணன்பேட்டை, எல்லப்பன்பேட்டை, கோரணப்பட்டு, டி.பாளையம் அகிய பகுதிகளில் அதிக அளவு மரவள்ளி பயிரிடப்பட்டுள்ளது. தற்போது அதிக வெப்பம் நிலவுவதால் மரவள்ளியில் பப்பாளி மாவு பூச்சியின் தாக்குதல் காணப்படுகிறது.

இதனைக் கட்டுப்படுத்த பாலூர் காய்கறி ஆராச்சி நிலையம் மூலம் அம்பலவாணன்பேட்டையில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பாலூர் காய்கறி நிலையத்தின் போராசிரியர்

கலைமணி, உதவி போராசிரியர் ஜெயபிரபாவதி அகியோர் மாவுப்பூச்சியால் எற்படும் சேதாரம், அதன் அறிகுறிகள், இழப்பீடு குறித்து விளக்கினர். மாவு பூச்சியை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகளை மரவள்ளி பயிரில் வெளியிட்டு செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

அம்பலவாணன் பேட்டையில் ஏலக்கி வாழையில் தண்டு கூண் வண்டு தாக்குதலுக்கான கட்டுபாட்டு முறைகள், ஜி-9 திசு வளர்ப்பு வாழையில் மகசூல் அதிகரிப்பதற்கான வழி முறைகள் குறித்து விஞ்ஞானிகள் விளக்கினர். குறிஞ்சிப்பாடி தோட்டக்கலை உதவி இயக்குனர் மல்லிகா, உதவி அலுவலர் சுந்தரமூர்த்தி உடன் இருந்தனர்.

**காட்டுமன்னார்கோவில் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : மே 04,2011,03:09 IST

காட்டுமன்னார்கோவில் : காட்டுமன்னார்கோவில் வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது.இது குறித்து காட்டுமன்னார்கோவில் வேளாண் துறை உதவி இயக்குனர் மதிவாணன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: வேளாண் இடுபொருட்கள் 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் வினியோகம் செய்யப்படுகிறது. பசுந்தாள் உரப்பயிர் தக்கை பூண்டு, ஜின்சல்பேட் மானிய விலையில் காட்டுமன்னார்கோவில், திருமுட்டம், ஆயங்குடி வேளாண் விரிவாக்க மைய கிடங்குகளில் விற்பனை செய்யப்படுகிறது. குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள் ஜிப்சம் மற்றும் சிங்சல்பேட் வாங்கி பயனடையவும், சம்பா சாகுபடி விவசாயிகள் கோடை மழையை பயன்படுத்தி தக்கை பூண்டு பசுந்தாள் உரப்பயிர் விதைத்து மடக்கி உழுது மண் வளத்தை பெருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கரும்பு விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ்., சேவை:அமராவதி சர்க்கரை ஆலை ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : மே 04,2011,03:40 IST

மடத்துக்குளம் : அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு, கரும்பு குறித்த தகவல்களை உடனுக்குடன் எஸ்.எம்.எஸ்., அனுப்பும் சேவை துவங்கியது. மடத்துக்குளம் அருகேயுள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 2010-2011ம் ஆண்டுக்கான அரவைப்பருவம் ஏப்.16ல் தொடங்கி நடந்து வருகிறது.

நடப்பு ஆண்டு அரவைக்காக 5,414 ஏக்கர் கரும்பு முன் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து 150 நாட்களுக்கு நடக்கும் அரவையில் 9.75 சதவீத கட்டுமானத்தில் 1,84,275 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு

கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு எடையளவு தொகை குறித்த விபரங்கள் பில் வாயிலாக வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்த ஆலையில் பதிவு செய்துள்ள 1,661 உறுப்பினர்களுக்கு கரும்பு குறித்து விபரங்களை எஸ்.எம்.எஸ்., வாயிலாக உடனுக்குடன் தெரிவிக்கும் சேவை துவங்கப்பட்டது.இதன்படி எடை மேடைக்கு கரும்பு வந்தவுடன், கரும்பு எடை மற்றும் விலை விபரங்கள் எடைமேடையிலுள்ள கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்படும்.

அடுத்த வினாடி சம்பந்தப்பட்ட கரும்பு விவசாயிகளின் மொபைல்போனுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பப்படுகிறது. இந்த சேவைக்கான தொடக்கவிழா மடத்துக்குளம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலுள்ள எடைமேடை அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதில் சர்க்கரை ஆலை தனி அதிகாரி ராமகிருஷ்ணன், ஊழியர்கள்,மற்றும் கரும்பு விவசாயிகள் பங்கேற்றனர்.

**உரம் தட்டுப்பாட்டால் விவசாயிகள் தவிப்பு:நிலமெல்லாம் குடியிருப்புகளாக மாறும் நிர்பந்தம்**

பதிவு செய்த நாள் : மே 04,2011,00:34 IST

கூடலூர் : கூடலூர் பகுதியில் காய்கறிகள் உற்பத்திக்கு தேவையான உரம் கிடைக்காததால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். கூடலூர் பகுதியில் நீண்ட காலத்துக்கு பயன் தரும் தேயிலை, காபி, குருமிளகு, ஏலம், கிராம்பு, பாக்கு மட்டுமின்றி, குறுகிய காலத்தில் பயன்தரும் சீசன் காய்கறிகளும் விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டு வருகின்றனர். வயல்வெளிகளில் பருவ மழை காலத்தில் நெல்லும், கோடையில் காய்கறிகளும் விவசாயம் செய்து வருகின்றனர். இங்கு, பாகற்காய், பஜ்ஜி மிளகாய், பீன்ஸ், முட்டை கோஸ், கத்தரிக்காய்,நேந்திர வாழை, இஞ்சி அதிகளவில் பயிரிடப்படுகிறது.

இங்கு பயிரிடப்படும் பாகற்காய், நேந்திர வாழை கேரளா மாநிலத்துக்கு அனுப்பப்படுகிறது. இஞ்சி, பஜ்ஜி மிளாகாய் கோவை, சென்னை, மதுரை உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்கு அதிகளவில் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த ஆண்டும் கோடை கால காய்கறிகளை அதிகளவில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். கடந்த மாதம் வரை விவசாயத்துக்கு தேவையான உரங்கள் தடையின்றி கிடைத்து வந்தது. தற்போது உரத்தின் விலை அதிகரித்து வருவதுடன், விவசாயத்துக்கு அதிகளவில் பயன்படுத்தும் உரங்கள் கடைகளில் கிடைப்பதில்லை.

"உரம் உற்பத்தி குறைந்து விட்டதால், தங்களுக்கே போதிய அளவு வினியோகம் இல்லை' என வியாபாரிகள் கூறுகின்றனர். இது குறித்து சிறு விவசாயி மாதன் கூறுகையில், ""கூடலூர் பகுதியில் கோடை காலத்தில் மட்டுமே காய்கறி விவசாயம் செய்யப்படுகிறது. தற்போது உரம் விலை தினமும் அதிகரித்து வருவதுடன், உரம் கிடைக்காமல் காய்கறி உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, காய்கறி உற்பத்திக்கு தேவையான உரங்களை தடையின்றி கிடைக்கவும், அதனை மானிய விலையில் வழங்கவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், எதிர்காலத்தில் இப்பகுதியில் காய்கறி விவசாயமும் பாதிக்கப்படுவதுடன், எஞ்சியுள்ள விவசாய விளை நிலங்களும் குடியிருப்புகளாக மாறி விடும் அபாயம் உள்ளது. வேலை வாய்ப்புகளும் வெகுவாக பாதிக்கப்படும் நிலை உருவாகும்," என்றார்.

**பலத்த காற்றுடன் மழை; வாழை, வெற்றிலை நாசம்**

பதிவு செய்த நாள் : மே 04,2011,08:30 IST

கரூர்: கரூர் மாவட்டத்தில் நேற்றிரவு பலத்த காற்றுடன் மழை பெய்ததால், வேலாயுதம்பாளையம், வெள்ளியணை, மாயனூர், சித்தலவாய், சித்தலம்பட்டி, லாலாபேட்டை, குளித்தலை ஆகிய பகுதிகளில் 250 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தில் வாழை மரங்கள் சாய்ந்து சேதமாயின. அதேபோல் வெற்றிலை கொடிக்கால்களும் நாசமாயின. இதனால் விவசாயிகள் வெகுவாக பாதிப்படைந்துள்ளனர்.

**மதுரையில் மழை பெய்தது மல்லிகை விலை கூடியது**

பதிவு செய்த நாள் : மே 04,2011,03:22 IST

மதுரை:மதுரையில் சில நாட்களுக்கு முன் பெய்த மழையால், மல்லிகை விலை மீண்டும் அதிகரித்துள்ளது.கடந்த வாரம் வரை ஒரு கிலோ மல்லிகை 30 ரூபாய் முதல் 50 ரூபாய்க்கு விற்கப்பட்டதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். தோட்டத்தில் மல்லிகை பூக்களை பறிக்கும் செலவை ஈடுகட்ட முடியாமல், பூக்களை பறிக்காமல் விட்டனர்.
இந்நிலையில், சில நாட்களுக்கு முன், மதுரையில் மழை பெய்தது. இதனால் மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டிற்கு மல்லிகை வரத்து குறைந்து, விலை அதிகரித்தது. நேற்று கிலோ 100 ரூபாய்க்கு விற்கப்பட்டது.சங்க நிர்வாகி சோ. ராமச்சந்திரன் கூறியதாவது :தற்போது மழை இல்லாததால், நல்ல விளைச்சல் ஏற்பட்டு, அடுத்த வாரம் வரத்து அதிகரிக்கும். இதனால் மீண்டும் விலை குறைய வாய்ப்புள்ளது.நேற்று ஒரு கிலோ ரோஜா ரூ.40, அரளி ரூ.50, கேந்தி ரூ.30, மரிக்கொழுந்து ரூ.30, வாடாமல்லி ரூ.25, பிச்சிப்பூ ரூ.150, முல்லைப்பூ ரூ.100, கோழிக்கொண்டை ரூ.30,சம்பங்கி ரூ.40, கனகாம்பரம் ரூ.200க்கு விற்கப்பட்டது, என்றார்.

**அடுத்த வாரம் அரிசி விலை உயரும்?**

பதிவு செய்த நாள் : மே 04,2011,03:23 IST

மதுரை:மதுரையில் ஒரு மாதமாக அரிசி விலையில் மாற்றமில்லை. சில கடைகளில் ஒரு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரை விலை அதிகரித்தும், குறைத்தும் விற்கப்படுகிறது. தற்போது அறுவடை முடிந்துள்ளதால், அடுத்த வாரம் கிலோவிற்கு ஒரு ரூபாய் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.அரிசி ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது : அனைத்து ஊர்களிலும் அரிசி ஆலை நவீனமாக்கப்பட்டுள்ளதால், அங்கு அரிசி அனுப்புவது குறைந்துள்ளது. அந்தந்த மாவட்டத்திலேயே அரிசி தயாராகுவதால், விலை சீராக இருக்கிறது. அறுவடை முடிந்துள்ளதால் அடுத்த வாரம் அரிசி விலை கூடும் என எதிர்பார்க்கிறோம்.நேற்று ஒரு கிலோ கர்நாடகா டீலக்ஸ் பொன்னி பழசு ரூ.36, புதுசு ரூ.17, மதுரை டீலக்ஸ் பொன்னி ரூ.30, புதுசு ரூ.23, வெள்ளை பொன்னி ரூ.35, புதுசு ரூ.27, செல்லப்பொன்னி ரூ.23, புதுசு ரூ.19, ஐ.ஆர்., 20 பழசு ரூ.23, புதுசு ரூ.20, ஐ.ஆர்., 36 பழசு ரூ.21.50, புதுசு ரூ.18, கல்சர் பொன்னி ரூ.23, புதுசு ரூ.21, பச்சரிசி ரூ.35, அடுத்த ரகம் ரூ.28, மாவு பச்சரிசி ரூ.20, பிரியாணி அரிசி ரூ.52, அடுத்த ரகம் ரூ.44க்கு விற்கப்படுகிறது, என்றார்.

**யூரியா உரத்தை தொழிற்சாலை உபயோகத்திற்கு பயன்படுத்தப்படுவதாக தமிழகம் முழுவதும் திடீர் புகார்**

பதிவு செய்த நாள் : மே 04,2011,02:03 IST

தூத்துக்குடி: தமிழகம் முழுவதும் யூரியா உரத்தை தொழிற்சாலை உபயோகத்திற்காக கடத்தப்படுவதாக புகார் எழுந்ததை தொடர்ந்து மாநிலம் முழுவதும் இதற்காக சோதனை மேற்கொள்ளப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் 5 குழுக்கள் அமைக்கப்பட்டு அதிரடி சோதனை நடந்தது. தமிழகத்தில் விவசாயத்திற்கு போதுமான உரங்கள் கிடைக்காத நிலையில் சில நேரங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுகிறது. இந்த தட்டுப்பாட்டை பயன்படுத்தி உரக்கடைகள் உரங்களின் விலையை தங்கள் இஷ்டத்திற்கு நிர்ணயம் செய்து கொள்ளை லாபம் பார்த்து வந்ததாக கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் பெரும் சங்கடத்திற்கு உள்ளாகி வந்தனர்.

இந் நிலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பொட்டாஷ் உரங்கள் தொழிற்சாலை உபயோகத்திற்கு பயன்படுத்துவதற்காக கடத்தப்படுவதாக அரசுக்கு தகவல் வந்தது. அந்த நேரத்தில் பொட்டாஷ் உரத்திற்கு மிகப் பெரிய அளவில் தட்டுப்பாடு நிலவியதால் உஷாரான

அரசு இது சம்பந்தமாக தொடர் சோதனை நடத்த மாநிலம் முழுவதும் உத்தரவிட்டது. இந்த உத்தரவின்படி படிப்படியாக இதுபோன்ற கடத்தல் குறைந்ததாக கூறப்படுகிறது. இதனை தொடர்ந்து சென்னை வேளாண்மைத்துறை ஆணையர் அப்துல் ஆனந்த் அனைத்து மாவட்ட வேளாண்மைத்துறை அதிகாரிகளுக்கும் அதிரடி உத்தரவு பிறப்பித்தார்.

இதனை தொடர்ந்து அனைத்து மாவட்டத்திலும் இது சம்பந்தமான சோத னை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினமும், நேற்றும் இரண்டு நாட்களாக அதிரடி சோதனை மேற்கொள்ளப்பட்டது. தூத்துக்குடி மாவட்ட வேள ாண்மை இணை இயக்குநர் ஜோசப் கருணாநிதி ஆலோசனையின் பேரில் தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குநர் குணபாலன், வேளா ண்மை உதவி இயக்குநர்கள் மோகன்ராஜ், பாரதி, உத்தண்டராமன், கிருஷ்ணபிள்ளை ஆகியோர் தலைமையில் வேளாண்மை அலுவலர்கள் கொண்ட 5 குழுக்கள் அமைக்கப்பட்டு உரக்கடைகளில் அதிரடி சோதனை மேற்கொள்ளப்பட்டது.

உரக்கடைகளில் விவசாயிகளுக்கு மட்டும் தான் யூரியா உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளதா அல்லது வேறு யாருக்கும் வழங்கப்பட்டுள்ளதா, மொத்தமாக உரக் கடையில் இருந்து யூரியா உரம் யாருக்காவது அனுப்பப்பட்டிருக்கிறதா என்பதை முழுமையாக அதிகாரிகள் சோதனை செய்தனர். வழக்கமாக அந்த கடைகளில் விற்பனையாகும் உரம் எவ்வளவு, தற்போது ஏதாவது உரங்களின் விற்பனையில் கூடுதல் ஆகியிருக்கிறதா போன்றவை குறித்து சோதனை செய்யப்பட்டிருப்பதாக வேளாண்மைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து அந்த வட்டாரங்கள் கூறியதாவது; யூரியா உரத்தை பொறுத்தமட்டில் அரசு மானியம் ஒரு கிலோவிற்கு விவசாயிகளுக்கு 10 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. இதனால் ஒரு கிலோ உரம் ரூ.5.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே உரம் தொழிற்சாலை உபயோகத்திற்கு என்றால் ஒரு கிலோ 15 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படுகிறது. மூன்று மடங்கு விலை கூடுதலாக இருப்பதால் தொழிற்சாலைகளுக்கு இந்த உரம் கடத்தப்படுவதாக கூறப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் ரேண்டம் முறையில் உரக் கடைகளில் சோதனை மேற்கொண்ட போது இம் மாவட்டத்தில் இருந்து தொழிற்சாலைகளுக்கு கடத்தல் இருப்பது போன்று தெரியவில்லை.

இருப்பினும் தொடர்ந்து இது சம்பந்தமான சோதனையை தீவிரமாக மேற்கொள்ள உள்ளோம். முன்பு வேளாண்மைத்துறையில் தரக் கட்டுப்பாடு பிரிவில் உள்ள உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள் தான் உரக் கடைகளில் சோதனை செய்ய வேண்டும் என்கிற உத்தரவு இருந்தது. ஆனால் தற்போது உரங்கள் பெருமளவில் விவசாய உபயோகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தி விட்டு தொழிற்சாலை உபயோகத்திற்கு கடத்தப்படும் சம்பவம் ஏற்பட்டதால்

வேளாண்மைத்துறையில் உள்ள அனைத்து உதவி இயக்குநர்கள், வேளாண் மை அலுவலர்கள் அனைவரும் உரக் கடைகளில் சோதனை செய்யலாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளதால் தற்போது அந்த நடைமுறைப்படி எல்லோரும் சேர்ந்து சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

வெளி மாநிலங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு தமிழகத்தில் இருந்து யூரியா உரம் கடத்தப்படுவதாகவும் தகவல் வெளியாகி இருப்பதால் இதில் முக்கியத்துவம் அளித்து சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உர வியாபாரிகளும் அதிக லாபம் கிடைக்கும் என்கிற எண்ணத்தில் அவர்கள் தொழிற்சாலைகளுக்கு உரங்களை கொடுத்து விடக் கூடாது என்பதற்காக உரக் கடைகளின் மீது வேளாண்மைத்துறை தற்போது அதிக கண்காணிப்பு செய்ய துவங்கியுள்ளது. தொழிற்சாலை உபயோகத்திற்கு உரங்களை வழங்குவது தெரியவந்தால் அந்த உர நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வது என்றும், விற்பனை லைசென்சை ரத்து செய்யும் அளவிற்கு அதிரடி ஆக்ஷன் மேற்கொள்ளவும் வேளாண்மைத்துறை உத்தரவிட்டிருக்கிறது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

**மரபணு ஆராய்ச்சிக்கு எதிர்ப்பு விவசாயிகள் சங்கம் தீர்மானம்**

பதிவு செய்த நாள் : மே 04,2011,03:27 IST

திண்டிவனம் : மத்திய அரசு மரபணு கத்தரிக்காயை தடை செய்ய வேண்டுமென இந்திய விவசாயிகள் முன்னேற்ற சங்கம் தீர்மானம் நிறைவேற்றியது. திண்டிவனத்தில் உள்ள சங்க தலைமை அலுவலகத்தில் மாநில செயற்குழு கூட்டம் நடந்தது. சங்க தலைவர் வக்கீல் வசந்தி தலைமை தாங்கினார். நிறுவனர் வக்கீல் முருகேசன் முன்னிலை வகித்தார். பொதுச்செயலாளர் ஜானகிராமன் வரவேற்றார். மனித நேய மக்கள் கட்சியைச் சேர்ந்த குணங்குடி அனிபா, ஐகோர்ட் வக்கீல் குபேந்திர குணபாலன் உட்பட பலர் பேசினர். பொருளாளர் ஏழுமலை, மாவட்ட தலைவர் பலராமன் மற்றும் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சத்யசாயிபாபா மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மேலும் மரபணு கத்தரிக்காயை மத்திய அரசு தடை செய்வதுடன், மரபணு ஆராய்ச்சியை முழுமையாக தடை செய்ய வேண்டும். விவசாய உற்பத்தி பொருட்களுக்கு விவசாயிகள் விலை நிர்ணயம் செய்யும் முறையை சட்டமாக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அர்ச்சுனன் நன்றி கூறினார்.

**பூச்சிக்கொல்லி மருந்தால் சேதம் கரும்புக்கு இழப்பீடு கோரிக்கை**

பதிவு செய்த நாள் : மே 04,2011,03:27 IST

விழுப்புரம் : செஞ்சி அருகே தவறான பூச்சி மருந்தால் சேதமான கரும்பு பயிருக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென விவசாயி கோரிக்கை வைத்துள்ளார். செஞ்சி அருகே உள்ள தளவா ளப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த விவ சாயி தண்டபாணி. நேற்று கலெக்டர் அலுவலகம் வந்த இவர், தவறான பூச்சி கொல்லி மருந்தினால் தனது கரும்பு பயிர் கருகிப்போனது குறித்து நடவடிக்கை எடுக்க வேண் டுமென புகார் மனு கொடுத்தார். இப்பிரச்னை குறித்து விவசாயி தண்டபாணி கூறியதாவது: தளவாளப்பட்டு கிராமத்தில் ஒன்றரை ஏக்கர் அளவில் கடந்தாண்டு கரும்பு பயிர் செய்திருந்தேன். இடையே விக்கிரவாண்டியில் உள்ள ராசி பண்ணை சர்வீசில், பூச்சிக்கொல்லி மருந்து வாங்கி கரும்பு பயிரில் தெளித்தேன். அதிக பவர் கொண்ட பூச்சி களைக்கொல்லி மருந்தை அவர்கள் பரிந்துரைத்து கொடுத்ததால் மருந்து தெளித்த சில நாட்களிலேயே கரும்பு பயிர்கள் முழுவதும் கருகி வீணாகிவிட்டது. இது குறித்து வல்லம் ஒன்றிய வேளாண் அதிகாரிகளிடமும், போலீசிலும் புகார் கொடுத்தேன். அவர்கள் வந்து பார்த்துவிட்டு சென்றனர். ஆகையால் கரும்பு பயிர் பாதிப்பு குறித்து நடவடிக்கை எடுத்தும், கரும்பு பயிருக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென கோரிக்கை வைத்தார். தேர்தல் நடத்தை விதிமுறைகள் வரும் 13ம் தேதி வரை அமலில் இருப்பதால், அவர் கொண்டு வந்த கோரிக்கை மனுவை கலெக்டர் அலுவலகத்தில் இருந்த புகார் பெட் டியில் போட்டுவிட்டு சென்றார்.

**வறட்சியை தாங்கும் தென்னங்கன்று விற்பனை**

பதிவு செய்த நாள் : மே 03,2011,23:10 IST

கோவை : வறட்சியை தாங்கி வளரும் தன்மையுள்ள தென்னங்கன்றுகளை தமிழ்நாடு வேளாண் பல்கலை விற்பனைக்கு வைத்துள்ளது.கோவை, வேளாண் பல்கலை அறிக்கை:தென்னை பயிரிடுவோர் அதிகரித்து வரும் நிலையில், உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் பல்வேறு ஆய்வுகள் நடக்கின்றன. வறட்சியை தாங்கி வளரும் தன்மையுள்ள தென்னங்கன்றுகள், ஆழியாறு நகர் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் விற்பனைக்கு உள்ளன. குறிப்பிட்ட இந்த ஆழியாறு நகர் தென்னை- 1 ரகம், தமிழகத்தின் சீதோஷ்ண நிலைக்கேற்ற நெட்டை ரகமாகும். நட்ட ஐந்தாண்டுகளில் பாளை விடும்; ஆண்டுக்கு ஒரு மரத்தில் தலா 126 காய்கள் வரும். அதிகபட்ச விளைச்சலாக எக்டருக்கு தலா 2.88 டன் கொப்பரை கிடைக்கும். எண்ணெய் சத்து 66.7 சதவீதம் உள்ளது. தென்னையை தாக்கும் முக்கிய பூச்சிகளான காண்டாமிருக வண்டு, செதில் பூச்சி, சிவப்பு கூன் வண்டு போன்றவற்றின் தாக்குல்களை, மற்ற நெட்டை ரகங்களை விட கூடுதலாக தாங்கும்

தன்மை உடையது.

நடுவதற்கேற்ப தயார் நிலையில் உள்ள இந்த தென்னங்கன்றுகள் ரூ.15 ஆக விலை குறைக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்த கோடை மழை தென்னை நடவுக்கு ஏற்றதாக உள்ளது. எனவே, இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஆழியாறு நகர் தென்னை-1 ரகத்தை நடவு செய்து பயனடைய விவசாயிகள் முன்வர வேண்டும். கூடுதல் தகவலுக்கு, "பேராசிரியர் மற்றும் தலைவர், தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியாறு நகர்-1, கோவை' என்ற முகவரியிலோ, அல்லது 04253 288722 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மீன் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : மே 03,2011,23:10 IST

கோவை : ராமேஸ்வரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளிலிருந்து கோவைக்கு வரும் மீன் வரத்து குறைந்ததால் மீன் விலை அதிகரித்துள்ளது. "மீன்கள் குஞ்சுபொறிக்கும் காலத்தில் 45 நாட்களுக்கு மீனவர்கள் மீன் பிடிக்க வேண்டாம்' என அரசு அறிவித்துள்ளதால், விசைப்படகுகளில் மீன் பிடிக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. தோனிப்படகுகள் மற்றும் பைபர் போட்களில் அதிர்வு இல்லாமல் மீன் பிடிக்கும் பணி நடக்கிறது. கடலில் நீண்ட தூரம் சென்று மீன் பிடிக்க முடியாத சூழல் நிலவுகிறது. எதிர்பார்த்த அளவு மீன் விற்பனைக்கு வந்து சேருவதில்லை. இதனால் மீன் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. கோவைக்கு ராமேஸ் வரம் பகுதியிலிருந்து வரும் இறா (கிலோ ஒன்றுக்கு) ரூ. 200க்கு விற்றது, தற்போது ரூ. 250க்கும், பாறை ரூ. 150லிருந்து ரூ.200க்கும், வாவல் 400 முதல் ரூ.450 வரை விற்கிறது. வால மீன் ரூ. 150க்கும், விலாங்கு ரூ. 200க்கும் மீன் மார்க்கெட்டில் விற்பனையாகிறது. சென்னையிலிருந்து வரும் வஞ்சரம் மீன் 450 வரை விற்பனையானது. ஊழி, ரூ.200க்கும், சாதாரண வகை அதிகபட்சமாக ரூ.50க்கு விற்றது. மீன் வியாபாரிகள் கூறுகையில்,"மார்க்கெட்டுக்கு வழக்கமாக 20 முதல் 25 லாரிகளில் மீன் விற்பனைக்கு வரும். தற்போது 10 லாரிகளில் மட்டுமே வருகிறது. அதனால், விலை பல மடங்கு உயர்ந்து விட்டது' என்றனர்.

**விதை விற்க உரிமம் தேவை**

பதிவு செய்த நாள் : மே 03,2011,23:10 IST

கோவை : "விற்பனை உரிமம் பெறாமல் விதைகளை விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்' என, விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுச்சாமி நடேஷன் எச்சரித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கோவையில் அலங்காரச்செடிகள், விற்பனை செய்யும் நர்சரிகள் அதிகளவில் உள்ளது. இவ்விடங்களில் தென்னை, பழமரக்கன்றுகள், காய்கறி நாற்றுக்கள் மற்றும் ஏராளமான விதைகள் விற்பனை செய்து வருகின்றனர்.

நாற்றுக்களை விற்பனை செய்யும் அனைத்து நர்சரிகளும் கோவை விதை ஆய்வு துணை இயக்குனரிடம் விற்பனை உரிமம் பெற வேண்டும். விற்பனை உரிமம் பெறாமல் விற்பனை செய்தால் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம். இவற்றை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு விதை ஆய்வு இயக்குனர் பொன்னுசாமி நடேஷன் கூறியுள்ளார்.

தினத்தந்தி

***ஜூன் மாதம் வரை சர்க்கரை இறக்குமதி மீதான தீர்வை ரத்து***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்து வருகிறது. ஐந்து லட்சம் டன் வரை சர்க்கரை ஏற்றுமதி செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மத்திய அரசு சர்க்கரை இறக்குமதி மீதான வரியை ரத்து செய்துள்ளது. இது, சுத்திகரிக்கப்பட்ட மற்றும் மூலச் சர்க்கரைக்குப் பொருந்தும். வரி ரத்து திட்டம் ஜூன் மாதம் வரை அமலில் இருக்கும்.*

*உள்நாட்டில் உற்பத்தி சரிவடைந்ததால் அளிப்பு குறைந்தததையடுத்து, கடந்த 2009–ஆம் ஆண்டில் சர்க்கரை இறக்குமதி வரி ரத்து செய்யப்பட்டது. இவ்வாண்டு மார்ச் மாதத்துடன் அந்த சலுகை காலாவதியானது. எனவே ஏப்ரல் 1–ந் தேதியிலிருந்து மீண்டும் 60 சதவீத தீர்வை நடைமுறைக்கு வந்தது. சலுகை காலத்தில் நம் நாட்டில் 60*

லட்சம் டன் சர்க்கரை இறக்குமதி ஆகியுள்ளதாக தெரிகிறது.
கடந்த 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) சர்க்கரை உற்பத்தி 1.47 கோடி டன்னாக சரிவடைந்தது. அப்போது தேவை 2.20 கோடி டன்னாக இருந்தது. 2009–10 பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 1.90 கோடி டன்னாக உயர்ந்தது என்றாலும் உள்நாட்டு தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் அளவிற்கு இல்லை. 2010–11 பருவத்தில் 2.45 கோடி டன் சர்க்கரை உற்பத்தி ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்தாலும் கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி இல்லை

கோதுமைக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைக்கிறது. எனவே இப்போது ஏற்றுமதி செய்தால் அது விவசாயிகளுக்கும், ஏற்றுமதி நிறுவனங்களுக்கும் மிகவும் ஆதாயம் அளிப்பதாக இருக்கும். எனினும் மத்திய அரசு தீவிர ஆய்விற்குப் பின் தற்சமயம் கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்க முடியாது என திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. அதிகாரம் பெற்ற அமைச்சர்கள் குழு மாநில அரசுகளுக்கு 50 லட்சம் டன் அரிசி மற்றும் கோதுமையை விநியோகிக்கவும் முடிவு செய்துள்ளது.
அண்மையில் நிறைவடைந்த ரபி பருவத்தில் நம் நாட்டில் 8.24 டன் கோதுமை உற்பத்தியாகி உள்ளது. எனினும் அரசு முகமை அமைப்புகள் நடப்பு சந்தைப்படுத்துதல் பருவத்தில் (ஏப்ரல்–மார்ச்) இதுவரை கொள்முதல் செய்த கோதுமை 50 சதவீதம் குறைந்து போயுள்ளது.
இந்திய உணவு கழகம்
மே 2 வரையிலான காலத்தில் இந்திய உணவுக் கழகம் உள்ளிட்ட அரசு அமைப்புகள் 1.85 கோடி டன் கோதுமையை வாங்கியுள்ளன. இது, கடந்த பருவத்தின் இதே காலத்தில் 1.96 கோடி டன்னாக இருந்தது. ஆக, நெல் கொள்முதல் 11 லட்சம் டன் குறைந்துள்ளது.
இதே காலத்தில் 2.67 கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக உணவு தானியங்கள் கையிருப்பு குறித்து கணக்கெடுப்பதையும், உணவு பாதுகாப்பு சட்டம் குறித்து முடிவு எடுப்பதையும் அதிகாரம் பெற்ற அமைச்சர்கள் குழு ஒத்தி வைத்துள்ளது. மே 13–ந் தேதிக்குப் பின்னர் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிகிறது.
மத்திய அரசு, நடுத்தர வர்க்கத்தினருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வர விரும்புகிறது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

### சர்க்கரை

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,770-2,790

### மணிலா பயறு

80 கிலோ கொண்ட மூட்டை
3,780-3,830

### கடலை எண்ணெய்

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
8,550-00

### கடலை புண்ணாக்கு

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,550-00

### தேங்காய் எண்ணெய்

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,826-00

### நல்லெண்ணெய்

குமாகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 12,300-00
டின் (15கிலோ) 1,700-00

### விளக்கெண்ணெய்

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
10,800.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

### சூரியகாந்தி எண்ணெய்

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,155.00

### ரீபைண்டு ஆயில்

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,465.00

### வனஸ்பதி

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,100.00

### பாமாயில்

10 கிலோ டின் (வரி தனி)
563-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மே.3-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துவரம்பருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (நாவரை) | ரூ. 5000 | 52.00 |
| கன்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,மே.3-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 8,998
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 10,404
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 13,796
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 12,092
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 14,060
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 13,799
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 22,215

## எண்ணை மார்க்கெட்

கோவை,மே.3-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,500 | 96.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1100 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1030 | (-) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1620 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 118.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 58.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,330 | 90.00 |
| வனஸ்பதி | | |
| வில்வி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,225 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 990 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,060 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,060 | - |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.210.00 | அதிகபட்சவிலை | ரூ.298.00 |
| சராசரி விலை | ரூ.140.00 | சராசரி விலை | ரூ.220.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.165.23 | குறைந்தபட்சவிலை | ரூ.266.93 |

**பட்டு நூல் ரூ.1,846**

## கோவை உழவர் சந்தை

கோவை,மே.3-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 58-00 | காலிப்ளவர் | ரூ. | 24-00 |
| கத்தரிக்காய் | ரூ. | 10-12 | பொறியல் தட்டை | ரூ. | 12-14 |
| வெண்டைக்காய் | ரூ. | 14-16 | பச்சை மொச்சை | ரூ. | 30-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 10-14 | தேங்காய் | ரூ. | 8-15 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 16-00 | பட்டாணி | ரூ. | 60-00 |
| புடலை | ரூ. | 5-6 | பூண்டு | ரூ. | 100-00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 28-00 | கறிவேப்பிலை | ரூ. | 20-00 |
| சுரைக்காய் | ரூ. | 8-10 | அகத்தி | ரூ. | 15-00 |
| பாகற்காய் | ரூ. | 16-18 | வாழைக்காய் | ரூ. | 16-00 |
| கொத்தவரை | ரூ. | 12-14 | குடைமிளகாய் | ரூ. | 36-00 |
| பூசணிக்காய் | ரூ. | 10-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 16-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 7-8 | டபுள்பீன்ஸ் | ரூ. | 32-00 |
| பேரக்காய் | ரூ. | 18-20 | கறிபீன்ஸ் | ரூ. | 24-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 14-16 | புஸ்பீன்ஸ் | ரூ. | 32-36 |
| குண்டு மிளகாய் | ரூ. | 24-25 | காளான் | ரூ. | 80-140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 27-29 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 11-00 | மாங்காய் | ரூ. | 12-14 |
| இஞ்சி | ரூ. | 32-00 | திராட்சை | ரூ. | 32-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 24-28 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 16-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 22-24 | கொய்யா1கிலோ | ரூ. | 24-28 |
| சேனைகிழங்கு | ரூ. | 28-00 | மாதுளை1கிலோ | ரூ. | 130-160 |
| கருணைகிழங்கு | ரூ. | 26-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 14-15 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | வரமிளகாய் | ரூ. | 90-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | மாம்பழம் | ரூ. | 50-40 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | ஆப்பிள் | ரூ. | 115-120 |
| சிறுகிழங்கு | ரூ. | 30-00 | சாத்துக்குடி | ரூ. | 48-00 |
| முள்ளங்கி | ரூ. | 10-12 | நெல்லிக்காய் | ரூ. | 44-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20-00 | ஆரஞ்சு | ரூ. | 66-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 8-10 | வெள்ளரி | ரூ. | 12-16 |
| நூல்கோல் | ரூ. | 20-00 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| கொத்தமல்லி | ரூ. | 30-32 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32-00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 20-00 | அவரை | ரூ. | 22-24 |
| முட்டைகோஸ் | ரூ. | 8-10 | நிலக்கடலை | ரூ. | 35-00 |
| கலர்கோஸ் | ரூ. | 15-00 | மக்காச்சோளம் | ரூ. | 12-18 |
| புதினா | ரூ. | 16-00 | தர்பூசணி | ரூ. | 9-12 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.26400 |
| மிளகு (சேட்டன்) | ரூ.27200 |
| மிளகு (வயநாடன்) | ரூ.29200 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 11000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 11000 |
| சுக்கு(புதியது) | ரூ.15000 |
| சுக்கு(பழையது) | ரூ.10100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10100 |
| கொப்பரை நாடன் | ரூ.6525 |
| கொப்பரை ராசு | ரூ.6575 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6825 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ.6800 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6550 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22500 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23200 |
| ரப்பர் பால் | ரூ. 17000 |
| காப்பி | ரூ. 10200 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 5700 |
| நேந்திரகாய் | ரூ. 1600 |
| இஞ்சி | ரூ. 1100 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,752.00 | 16,800.00 | 16800.00 |
| ஒரு கிராம் | 2,094.00 | 2,100.00 | 2100.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 67,690.00 | 72,400.00 | 72,000.00 |
| ஒரு கிராம் | 72.40 | 72.40 | 72.00 |